# பாரதிய ஜனதா கட்சி

(மத்திய அலுவலகம்)

11, அஷோக் சாலை, புது தில்லி – 110001

தொலைபேசி: 23005700 தொலைநகல்: 23005787

மே 02, 2013

## பாகஜ தேசியத் தலைவர் ராஜ்நாத் சிங்கின் செய்தி அறிக்கை

சரப்ஜித் சிங் படுகொலை நன்கு திட்டமிட்ட சதி என்று கூறிய பாஜக தேசியத் தலைவர் ராஜ்நாத் சிங், "பாகிஸ்தானுக்கான இந்தியத் தூதரைத் தற்போதைக்குத் திரும்ப அழைத்துக்கொள்ள வேண்டும்" என்றார்.

"பாகிஸ்தானில் மேற்கொள்ளப்பட்டுவரும் இந்திய எதிர்ப்பு நடவடிக்கைகளைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது இந்தியா சர்வதேச நிர்ப்பந்தங்களை அதிகரிக்கச்செய்ய வேண்டும். அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று திரு. ராஜ்நாத் சிங் இன்று குறிப்பிட்டார். சரப்ஜித் சிங் மரணம் ராஜதந்திர ரீதியிலான தோல்வி என்று சொன்ன அவர், "தன்னுடைய மண்ணிலிருந்து நடைபெறும் பயங்கரவாத நடவடிக்கைகளை பாகிஸ்தான் நிறுத்தாதவரையிலும்" அந்நாட்டுடனான ராஜதந்திர உறவுகள் குறைத்துக்கொள்ளப்பட வேண்டும் என்றார்.

"கட்டுப்பாட்டு எல்லைக்கோட்டுக்கு அருகில் இந்தியச் சிப்பாய்கள் இருவரது சடலங்கள் தலைகள் துண்டிக்கப்பட்ட நிலையில் கிடந்ததைப் பார்த்தும் இந்தியா கடுமையான நிலைப்பாட்டினை மேற்கொண்டிருந்தால் இது நடந்திருக்காது" என்றார் திரு. சிங்.

"அப்போதே நம் தூதரைத் திரும்ப அழைத்துக்கொள்ள வேண்டும் என்று பாஜக கோரியது. ஆனால் அந்த ஆலோசனைக்கு அரசு

செவிமடுக்கவில்லை. பாகிஸ்தான் சிறைகளில் உள்ள இந்தியக் கைதிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் இந்தியா பாகிஸ்தான் மீது நிர்ப்பந்தம் செலுத்த வேண்டும்” என்றார் அவர்.

“தேசிய நலன்கள் விஷயத்தில் எந்த்த் தீர்வும் காண இயலாமல் அரசு பரிதாபகரமாகத் தோல்வியடைந்திருக்கிறது. ராஜதந்திரத் தோல்வியை மறைக்க பலவீனமான அறிக்கைகளை வெளியிட்டுக்கொண்டிருக்கிறது” என்று கூறிய திரு ராஜ்நாத் சிங், சரப்ஜித்தின் குடும்பத்துக்குத் தேவையான அனைத்து விதமான ஆதரவையும் நஷ்ட ஈட்டையும் உதவிகளையும் வழங்க வேண்டும் என்றும் கோரினார்.

(ஓம் பிரகாஷ் கோஹ்லி)
தலைமை அலுவலகப் பொறுப்பாளர்